திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் பொதுச் செயலாளர், நிரந்தர முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலே, கடவு எண் 7-ல் பாலப் பணிகள் ஓரளவு நடந்து முடிந்த நிலையில், தனியார் ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே, அந்தப் பணிகள் விரைவாக நடக்காமல், தடைபட்டுக் கிடக்கின்றன. ஆகவே, அந்த வழக்கு எந்த நிலையில் இருக்கிறது? வழக்கை விரைவாக முடித்து, மக்களுடைய பயன்பாட்டிற்கு, அந்தப் பாலத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கரங்களால் திறந்து வைக்கிற நாள், எந்த நாள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடவு எண் 7 பகுதியில், பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, தனியார் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே, அது தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வழக்கு முடிந்த பிறகு விரைவாகப் பணிகள் துவங்கப்பட்டு, பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு அது கொண்டுவரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

174—

தொழிற்பேட்டை

***34772—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 ஆகஸ்ட் 31]

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தான்தோணி ஒன்றியப் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தான்தோணி ஒன்றியப் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால், தொழிற்பேட்டை அமைக்க, சிட்கோ மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

திரு. செ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய தெய்வம், 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற உயர்ந்த நோக்கத்தோடு மக்களாட்சி செய்யும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தான்தோணி ஒன்றியப் பகுதியிலுள்ள மக்களின் நீண்ட நாள் கனவை நிறைவேற்றும் வகையில், அப்பகுதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிற்பேட்டை ஒன்று அமைத்துத் தந்தால் அப்பகுதி மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அப்பகுதி மக்களுக்குத் தொழிற்பேட்டை ஒன்று அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், ஆத்தூரில்

36 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பேட்டையும், எஸ். வெள்ளாளப்பட்டி என்ற இடத்தில் ஒரு தொழிற்பேட்டையும் சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக, கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட எஸ். வெள்ளாளப்பட்டியில் ஏற்கெனவே ஒரு தொழிற்பேட்டை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், 2014–2015 ஆம் ஆண்டில் கரூர் மாவட்டத்திலேயே புஞ்சை ஆலாக்குறிச்சி என்ற பகுதியில் ஒரு புதிய தொழிற்பேட்டையை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்காக 52 ஏக்கர் நிலம் அங்கே கையகப்படுத்தப்பட்டு, பணிகள் இன்றைக்குச் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, சிட்கோ நில வங்கி மூலமாகக் கரூர் மாவட்டத்தில் குளித்தலை பகுதியில் புல்லடை கிராமத்தில் 50 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

175—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***52771—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியிலுள்ள குஜிலியம்பாறை கிராமத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு